**இணைப்பு 02**

## 05.**போட்டி விபரங்கள்**

சகல போட்டிகளினதும் விபரங்கள் இணைப்பு 04 இல் காட்டப்பட்டுள்ளதுடன் ஓவியம், சிறுவர் கதைகள், குறுநாடகம் செய்யுள் உறையுள் போட்டிகளின் பொருட்டான மாத்திரம் விபரங்கள் கீழே குறிப்பிடப்படுகின்றவாறாகும்.

I. ஓவியப் போட்டியின் பொருட்டு 18x14 அளவிலான பிரிஸ்டல்போட் அல்லது சித்திரம் வரையும் தாளைப்பயன்படுத்தவும். வெளிச்சம, இருட்டு மற்றும் முப்பரிமானப் பண்புகள் வெளிக்காட்டப்படுகின்ற விதத்தில் ஓவியம் வரையச் செய்யவும். வெளியீட்டு ஓவியங்களை மாத்திரம் உருவாக்கிக் கொள்ள வேண்டியதுடன் அலங்கார ஓவியங்களை வரைதலாகாது. <u>பிளேடிக்னம், மற்றும் பேனாக்களை பயன்படுத்த வேண்டாம்.</u>

II. வங்கி வலய மட்டத்தில் சிறுவர் கதைகள் போட்டியின் பொருட்டு 05 மணித்தியால நேரத்தினை வழங்கி பிள்ளைக்கு சுய தலைப்பினை மையமாகக் கொண்ட படைப்பாக்கமுள்ள சிறுவர் கதையொன்றினை எழுதுவதற்கு சந்தர்ப்பம் ஒன்றினை வழங்குதல் வேண்டும். அங்கு தெரிவு செய்யப்படுகின்ற ஆக்கங்கள் பிரதேச செயலக மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் அக் கதைப்புத்தகத்தினை சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வாறு உருவாக்கப்பட்ட புத்தகத்தின் பின்பக்க அட்டையில் புள்ளி வழங்குவதற்குரிய படிவத்தினை பயன்படுத்தவும். (இணைப்பு இலக்கம் 06) சிறுவர் கதைப்புத்தகத்தினை உருவாக்கி பொறுப்பேற்கும் போது அந்த நடுவர் குழு பிள்ளைகள் போட்டியில் கலந்து கொண்டு உருவாக்கிய ஒரு புத்தகமாகும் என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

III. சிறுவர் கதைகள் போட்டியின் பொருட்டு தேசிய போட்டிகளுக்கு பிள்ளைகளை கலந்து கொள்ளச் செய்யலாகாது என்பதுடன் மாவட்ட போட்டியில் வெற்றி பெற்ற சிறுவர்களின் சிறுவர் கதைப் புத்தக படைப்புக்களை மாத்திரம் குறித்த தினத்தில் அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். அவ்வாறு செய்யத் தவறும் போட்டியாளர்களின் சிறுவர் கதைகள் தேசிய மட்டப் போட்டித் தொடரிலிருந்து நிராகரிக்கப்படும். (சிறுவர் ஒருவர் போட்டிக்காக முன்னிலைப்படுத்துகின்ற சிறுவர் கதைப் புத்தகத்தில் போட்டியாளரின் பெயர், வயதுத் தொகுதி, பிரதேச செயலகப் பிரிவு, மற்றும் மாவட்டத்தினை தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.)

IV. குறு நாடகப் போட்டியின் பொருட்டு ஏற்புடைய **<u>ஆத்மீக அபிவிருத்தி /சமூக ரீதியாக சமூகத்திற்கு சிறந்த செய்தி ஒன்றினை வழங்க கூடிய தலைப்பு</u>** ஒன்றினை தெரிவு செய்து கொள்ளல் வேண்டும்.

V. செய்யுள், மற்றும் உறையுளின் பொருட்டு 1-2 மணித்தியாலத்திற்கு இடைப்பட்ட காலத்தினை சிறுவர்களுக்கு வழங்கி குறிப்பிடப்பட்டுள்ள தலைப்புகளுக்கு ஏற்றதான பிரகாரம் ஆக்கங்களை முன் வைத்தல் வேண்டும். தெரிவு செய்யப்படுகின்ற சிறுவர்கள் அந்தந்த கட்டங்களில் போட்டிகளில் கலந்துகொள்ளச் செய்தல் வேண்டும்.